
225
13 NOV 1930

உ

சிவமயம்.



# ஸ்ரீ சிவகுருசதகம்.

இஃது

பிரம்மஸ்ரீ

சுவாமி சிவாநந்த சரஸ்வதியவர்களால்

இயற்றப்பெற்று

ஸ்ரீமத். வேங்கட்டராமசிவனாரவர்களுக்கு

அளிக்கப்பெற்று

மதுரை

சு. ஞானம்பாள் அவர்களால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

1930.

417
430
647

2529
894.811

உ

சிவமயம்.

# ஸ்ரீ சிவகுருசதகம்.

இஃது

சுவாமி சிவாநந்த சரஸ்வதியவர்களால்

இயற்றப்பெற்று

ஸ்ரீமத். வேங்கட்டராமசிவனாரவர்களுக்கு

அளிக்கப்பெற்று

மதுரை

சு. ஞானம்பாள் அவர்களால்

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

1930.

# மதிப்புரை.

---

திருநெல்வேலி ஜில்லா கோடகநல்லூர் பிர்ம்மஸ்ரீ சுந்தர சுவாமிகளது சிஷ்யப் பிரசிஷ்யராய் ஷை சுவாமிகளது வாசஸ்தானமாகிய அரிமழமென்னும் க்ஷேத்திரத்தில் ஷை சுவாமிகளது கைங்கர்யத்திலேயே சதா ஈடுபட்டு விளங்கிவந்த பிர்ம்மஸ்ரீ சுவாமி சிவாநந்த சரஸ்வதியென்னுந் திருநாமம் பூண்டவர் முன் இச்சிவகுருசதக மென்னும் பிரபந்தத்தை யியற்றிப் பின் ஸ்ரீ ஜெகத்குரு ஸ்துதி, நானாஜீவவாதக் கட்டளை, அகோரரந்தாதி யென்னும் நூல்களை இயற்றியும், பிரமகீதை, ஸ்ரீசங்கரவிஜய முதலிய நூல்களைவடமொழியினின்று தென்மொழியில் மொழிபெயர்த்துமுள்ளார். இவர் அதிபால்யத்தில் பரமஹம்ஸ ஆசிரமத்தை விதிவத்தாய் அடைந்தவர்களாயும் மாரிபோல் மாறுவேண்டாது கடையருயர்ந்தோரென்னும் கற்பனையற்று கருணையேயுருவாய் அநந்த கல்யாணமாகிய ஞானாமுதத்தை யளித்தருளிய ஷை சுவாமிகளவர்கள் தன்னோடு அபேத சகபாடியாய் விளங்கிய வேங்கட்டராம சிவனாவர்கள் இயற்றியதாக அளித்த இச்சிவகுருசதகத்தைப் பார்த்த அளவில் சூரியோதய காலத்திற்குமுன் இருந்த இருள் எவ்விதமா யேகிற்றென்று விசாரிக்க வேண்டாதது போல இந்நூலை அப்பியாசித்து வந்தவர்களுடைய இதயத்திலிருந்த மூலாக்ஞானம், சுவாமிசிவகுரு, பிர்ம்மஸ்ரீ சுவாமி சிவாநந்தசரஸ்வதி யவர்களைத் தரிசித்த அளவிலேயே நிவர்த்தியாயிற்றென்பது, சர்வாநுபவசித்தமாய் இருப்பதால் ஷை சுவாமிகளது சிஷ்யையாகியும் மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்

வரர் ஆவணிமூல மகோற்சவ வேதபாராயண பிராமண போஜன நித்திய விபூதி யபிஷேக தர்ம மடத்திற்கும், ஸ்ரீசிதம்பரம் ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத ஆநந்தநடராஜாவினது நித்ய விபூதி யபிஷேக தர்மத்திற்கும் டிரஸ்டியாகிய சு. ஞானம்பாள் ஷை சுவாமிகளது உத்தரவின்படி இந்நூலை வெளியிடத் தொடங்கியதற்குக் காரணம், ஷை சுவாமிகள் சொற்பகாலங்களுக்கு முன்னால் திருநெல்வேலி குருக்குத்துறை தாமிரவர்ணிநதிதீரத்தில் மகாசித்தர்களாய் விளங்கிய ஷை சுவாமிகளது சந்நிதியைச் சிவாலயமாக்கப் பல பக்தர்களைக்கொண்டே நடைபெறவேண்டியிருப்பதால் சிவநேயச்செல்வச்சிகாமணிகளனைவரும் தக்கஉதவிபுரியுமாறு இந்நூலை ஷை சுவாமிகளது திருப்பணியின் ஞாபகார்த்தமாகவே வெளியிடப்பெற்றது.

இங்ஙனம்,

சு. ஞானம்பாள்,

சி. பெரியநாயகி,

மதுரை.

Q23:417 N30

உ

# சிறப்புப்பாயிரம்.

---

## அரிமழம் ஸ்ரீ சிவாநந்தஸ்வாமிகளியற்றியது.

---


ஆங்கட்ட புலியதளா தியமறைத்திங் கவதரித்தோ
னகலா தென்றுந்
தேங்கட்ட மாநெல்லைச் சிவகுருவின் றிருவடிக்குச்
செந்தே னென்ன
நாங்கட்ட மோய்ந்தின்ப நனிபடைக்க வொருசதக
நவின்றா னங்கள்
வேங்கட்ட ராமசிவ னெனும்பெரியோன் விண்ணவரும்
வியக்க மாதோ.

திவவுயா ழின்னிசையைப் பாடகனே யாவருக்குந்
தெரித்தல் போலச்
சிவகுருவின் மகிமையினைக் செகமெலாந் தெரிந்துயச்செய்
சிவரா மப்பேர்த்
தவவடிவன் றன்னுயிர்க்கோ ரின்னுயிராம் வேங்கட்ட
ராமன் சாற்று
முவமையில்லா விந்நூலை யுவந்தச்சிட் டுதவினன்யா
முய்யத் தானே.

---

உ

சிவமயம்.



பிரம்மஸ்ரீ

சுவாமி சிவாநந்த சரஸ்வதியவர்கள்.

உ
சிவமயம்.

# ஸ்ரீ சிவகுருசதகம்.

## காப்பு.

சிவகுரு நாதன் சேவடி யதனிற்
றிருச்சத கத்தொடை சாத்திப்
பவமது தொலைத்துப் பகர்ந்திட வொண்ணுப்
பரமவா னந்தமே படைக்கத்
தவமது செய்து தனையடைந் தவர்க்குத்
தணிவிலைத் தேவர்க்கு மரிய
சிவசுக மருளுங் கணபதி திருத்தாள்
சென்னியிற் சிந்தையிற் சேர்ப்பாம்.

## நூல்.

சிற்பர சிவனே நீமுன்
றெட்சிணு மூர்த்தி யாகி
யற்புத மாக நால்வர்க்
காலத்தி னடியிற் றோன்றித்
தற்பர நிலையைச் சாரச்
சாற்றினை யிப்போ திந்த
வற்பனேன் றன்னை யாள
வவனியில் வந்தா யம்மா. (1)

மாலயன் முதலோர் காணு
வடிவவோர் மனிதன் போல
ஞாலத்தில் வந்து நாயிற்
கடையனு நாயேன் சென்னி
மேலரு மறைக டண்டா
விண்ணவர் நண்ண வொண்ணுக்
கோலமார் கழல்கள் சூட்டிக்
கொண்டனை யடிமை தானே. (2)

அடியனேன் முன்னாட் செய்த
வருந்தவம் யாதோ தேறேன்
முடியணி வானோர்க் கெட்டா
முன்னவ முன்பு தோன்றி
மடியெலா மாய்த்தோர் நோக்கால்
வளந்திகழ் ஞான நல்கிக்
குடியெலா முய்ய வாண்டாய்
குறையெலாந் தீர்ந்த தன்றே. (3)

குறைதவிர்த் தெனையாட் கொண்ட
குருசிகா மணியே போற்றி
நறைகமழ் பாத நாயேன்
சென்னியில் நயக்க வைத்து
வறையொணு வின்ப மன்ற
வருளிடு மண்ணால் போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட
சிற்சதா னந்த போற்றி. (4)

போற்றிபுன் ஞயி னேற்குப்
புகலிட மான தேவே
போற்றியெவ் வறிஞ ராலும்
புகன்றிடாப் புனித வாழ்வே
போற்றிமா லயனுங் காணாப்
புரணபூ ரணஞ நாத
போற்றிநா தமுங் கடந்த
புண்ணியா போற்றி போற்றி. (5)

புண்ணிய ருளத்துத் தோன்றும்
புராதன போற்றி ஞானக்
கண்ணினை யருளு ஞான
கற்பக தருவே போற்றி
யெண்ணிலாக் கல்வி யாலு
மிலங்கிய கேள்வி யாலுந்
திண்ணிதா மதியி னாலுந்
தெளிந்திடற் கரியாய் போற்றி. (6)

கரியதா யிருந்தே யெல்லாங்
கண்டிடுங் கடவுள் போற்றி
விரிவதா முலகனைத்தும்
விளக்கிடும் விமல போற்றி
யரியமா மறையுங் காணா
வத்தொய்த போற்றி யந்தப்
பெரியவத் தொய்த மென்னும்
பெயரது மில்லாய் போற்றி. (7)

ஆய்புந்தி முதலா மந்தக்
கரணங்கள் விளங்கு மெத்தாற்
காய்கதிர் மதியோ டங்கி
கணங்களும் விளங்கு மெத்தால்
வாய்வனன் முதலாம் பூதம்
வரிசையாய் விளங்கு மெத்தா
லாய்வதற் கரிதா மந்தச்
சோதிநின் னடிகள் போற்றி. (8)

நின்னடித் தொண்டு செய்து
நிகரிலின் பெய்தி வாழ
வென்னமா தவந்தான் முன்பே
யியற்றின னெளியே னின்சீர்
பன்னரு மறைக ளெல்லாம்
பகர்ந்துமே முடியா தாயி
னென்னயான் றுதிக்க வல்லே
னேழையை யாண்ட தேவே. (9)

தேவமா தேவ வுன்றன்
றிருவடி யகலாச் செல்வ
மேவிட வருள்செய் வாயேல்
வினையெலா மகன்றோர் காலுந்
தாழ்விலாச் சுகநான் பெற்றுத்
தளர்வின்றி வாழ்வே னைய
காவியங் கண்ணி பாக
கடவுளே போற்றி போற்றி. (10)

## வேறு.

போற்றி நின்னடி போற்றிடப் புந்திதந்
தேற்றி னேயெனை யின்பமுத் திக்கரை
சாற்றொ ணாத தயாநிதி நீயலாற்
றேற்றம் யான்விரும் பேறொரு தேவரே. (11)

தேவ னீயன்றி மற்றொரு தேவரைப்
பாவி யாதவப் பான்மையென் னேயெனிற்
றேவ நின்வடி வன்றிமற் றோர்பொரு
ளாவி னானு நவிலுதற் கில்லையே. (12)

ஏன மாகிமா லேழ்தலஞ் சென்றெய்த்து
வான மேவி மலரயன் கண்டிடா
ஞான நாயக நின்னையிஞ் ஞாலத்திற்
றீன னேனண்ணச் செய்ததென் சித்ரமே. (13)

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயிக் குவலயந் தன்னிலை
சீல மேது மறியாச் சிறியேற்கு
மேல் வேயருள் செய்ததென் னின்பமே. (14)

இன்ப வாரியி லென்னை யமிழ்த்திய
வன்பர் தேடு மருமறைச் செல்வமே
நின் பதநினை யாது நிலையிலா
வின்ப மெண்ணுமிவ் வேழையை யாள்வையே. (15)

வைய மீதினில் வந்தெனை யாட்கொண்ட
வைய னேயடி யார்க்கமு தேவெறும்
பொய்ய னேனையுன் பொன்னடி தன்னிலை
மையல் தீர மகிழ்ந்து தரித்திடே. (16)

தரியா வன்புடன் சத்தினி பாதம்வந்
தரிய வீழ்ந்திவ னல்பக ரோன்றிடாப்
பெரிய வானந்தம் பித்த னடைந்திடத்
தெரிவை பங்கனே சீக்கிரஞ் செய்திடே. (17)

செய்யொ ணாதசி வானந்த சாகர
மெய்ய ருள்ளே விளங்கும் விமலனே
வெய்ய காமம் வெகுளி மயக்கறுத்
துய்யும் வண்ண முனதருள் செய்குவாய். (18)

வாய்மை யன்பு மனேலைய மாதிய
தூய்மை யாங்குண மொன்றுந் தொடர்ந்திடா
நாயி னேனையுன் னல்ல பதமலர்
வாய்மை யோடும் வணங்க வகுப்பையே. (19)

பைய ராவணி வேணிநின் பாதத்தைக்
கையி லாமல கக்கனி யென்னவே
வைய மீதினில் வந்தடி யேற்குமா
மையல் தீர வழங்கிட வேண்டுமே. (20)

## வேறு.

வேண்டுவ துன்றன் றிருவடி யன்றி
    விண்டுவி னுலகமும் விரிஞ்சன்
காண்டகு புரமுங் கற்பக நீழல்
    கவின்பெற விளங்குவிண் ணுலகும்
வேண்டில னடியர் வேண்டிய தளிக்கும்
    விமலனே கருணையங் கடலே
தூண்டரு ஞானச் சுடர்க்கொழுந் தேநற்
    றுரியமுங் கடந்தசற் குருவே. (21)

குருவுரு வாகி யாண்டருள் செய்த
    குணக்குன்றே குறிகுணங் கடந்த
வருவனே யடியா ரகத்தினி லூறு
    மானந்த வடிவனே யுனது
திருவடி மலர்க்கே யனுதினந் தொண்டு
    செய்திடா தவத்தினி லுழலுந்
தெருளிலா நாயேன் சீரியர் கூட்டஞ்
    சேர்ந்திடச் செய்வதுன் பரமே. (22)

பரவையி லுழலுந் துரும்பென நாயேன்
பண்டைவா தனையினாற் பார்பெண்
ணுரமிகு பொன்னென் றுரைத்திடப் பட்ட
வொப்பிலா வாசையாங் கடலில்
விரகிலா மையினான் வீழ்ந்துழல் கின்றேன்
வியன்கரை யுனதடி மேவ
வரமது வேண்டு மலரயன் வணங்கு
மலரடி யுடையமா தேவ. (23)

வல்லநான் மறையும் வசனித்து மறியா
வடிவுடைச் சிவகுரு வேநின்
னல்லபொற் பாத கமலமே தொழுவார்
நற்றிரு வடிதொழு தேத்தும்
வல்லுநர் பாத பங்கய நாயேன்
வணங்கவு மருள்புரி குவையேற்
பல்லுகஞ் சனன கோடிகள் பெறினும்
பயப்படேன் பராநந்தப் பொருளே. (24)

பொருனைநன் னதியின் வளமது வோங்கும்
புண்ணிய நெல்லையம் பதியி
லொருவரு மறியா வொருமொழி யதனை
யுணர்த்திய வுன்மனாந் தன்னை
யுருகிடே னந்த மொழியினை நினைந்தே
யுரைதழு தழுத்திடே னெஞ்சந்
தருவதோ கல்லோ விரும்பதோ மண்ணோ
தமியனேன் யாதுசாற் றுவனே. (25)

சாற்றுவ தென்னை தந்தையே மேரு
தன்னைநற் றனுவதாய்ச் சமைத்தாய்
போற்றுமவ் வுபமன் னியமுனி பொருட்டாய்ப்
புரையிலாப் பாற்கட லதனை
யேற்றமாய்ப் பின்னே நடக்கவுஞ் செய்தா
யிப்படி யியம்பிட வொண்ணு
வாற்றலாய் நினக்கு நாயினேன் மனத்தை
யழலாக் கெனச்செய லரிதோ. (26)

அரியமா மறையுந் தேடியுங் காணு
வமலநின் னடியிணை வேண்டிப்
பெரியமா முனிவர் யாவரு முடலைப்
பேணுத லொழிந்துகா னகத்தி
லெரியிடை நின்றும் புனல்சரு கதனை
யிச்சியா தெய்திடிற் புசித்து
முரியமா தவங்க ளாற்றினர் நாயே
னுடறனை நனிநம்பி னேனே. (27)

நம்பநின் னடியி லன்புசற் றில்லே
னுய்நரி பருந்திவற் றினுக்குப்
பம்பிய விரையா யிருக்குமிவ் வுடலைப்
பத்திரப் படுத்தியே பலரு
நம்பிட வாசா ஞானங்கள் பேசி
நாடொறும் வயிற்றையே வளர்த்து
வம்பிலே நாட்கள் போக்கிடா துன்றன்
மலரடி யடைவதெந் நாளே. (28)

அடையவு நினது திருவுரு வன்றி
யகிலத்தி லற்பமும் வேறாய்
விடையது வூர்தி யறிந்தில னேயென்
மெய்யன்ப ரிதயமா லயமா
வுடையமா தேவ வுன்னைத்தா னாக
வுணர்ந்திடு மடியவர் கூட்டம்
கடையனேன் சேர வரமது வேண்டுங்
கற்பனை கடந்தகற் பகமே. (29)

கடன்மடை திறந்தா லென்னவென் னிருகண்
களுஞ்சுக வருஷமே பொழிய
வுடனடுக் குறநின் பதமலர் நினைந்தென்
னுள்ளமு முருகியா னந்தக்
கடறனின் மூழ்க வரமது வேண்டுங்
கருணையங் கடலொரு வடிவா
யிடர்தவிர்த் தெனையாட் கொள்ளவே வந்த
வின்புரு வானசங் கரனே. (30)

## வேறு.

சங்க நின்பதத் தாமரைக் கல்லது
துங்க சோதி சொரூபனே தோற்றிமாய்
பங்க மான பதங்களுக் கல்லமெய்
புங்க மாகிய போதவா னந்தனே. (31)

நேச மாகி நினையு மடியற்குப்
பாச வேரறப் பண்ணுங்கிரு பாநிதி
மாச கன்ற மனத்தினு ளின்னையெத்
தேச வேளையுஞ் சிந்திக்கச் செய்குவாய். (32)

குவல யத்திற் குருமணி யாய்வந்த
சிவ குருபர செல்வசி வானந்த
பவ விருள்கெடப் பத்தன் மனத்தினிற்
சிவ தினகர னாகித் திகழ்ந்தையே. (33)

தைத்தி ரீயத்திற் சாற்றும் பொருணினைப்
பைத்தி யர்களும் பார்த்திட வல்லரோ
சிற்சொ ரூபனே சீரரு ளின்றியுன்
பொற்ப மர்பதம் புக்கிடல் பொய்யதே. (34)

தேவ நின்பதஞ் சேர்ந்த வடியர்கண்
மேவு சின்னங்க டம்முளொன் றேனுமிப்
பாவி யெய்திட லின்றிப்பா ழாகவே
யாவி யேகிடி லானந்த மெய்துமோ. (35)

எய்யும் விற்றூர மாக வதன்கணே
யுய்யு நல்லுயி ராக விலக்கிய
மைய நின்கழ லாகவும் யான்பெறச்
செய்ய வேண்டுநீ சிற்சுக வாரியே. (36)

சுகசிற் சத்தாய்த் துகளின்றி நுண்ணிதா
யகநீ யென்னு முரைக்கத்த மாயொன்றாய்
மிக வரியதாய் மேலாய் விளங்கிய
தகவு டைப்பிரமந் தானெனச் சாற்றினாய். (37)

தானே னச்சுட்ட ரூனுமி லாததாய்
வானே மான வயங்குசிற் கோலமாய்
மான மேயநன் மாதுரு வொன்றிலா
தான நின்னைத் தமியனே சாற்றுவன். (38)

சாற்றும் வாக்குத் தனக்குமெட் டாததாய்க்
காற்றுப் போன்ற கருத்துக்குந் தூரமாய்ப்
போற்று புண்ணியர் புந்தியிற் சோதியாய்த்
தோற்று ஞானச் சுகப்பெருங் குன்றமே. (39)

குன்றி டாத கொழுஞ்சுட ரேயன்பர்க்
கன்றி யார்க்கு மறிவரி யாய்செம்பொன்
மன்றி லாடுநன் மாமணி யேயுனை
யன்றி யொன்றை யடிய னினைவனே. (40)

## வேறு.

நினைவுவொன்று மின்றிநிற்கும் நிருவிகற்ப நிலையினைத்
தினையளவு காலமேனுஞ் சிறியனே னடைந்திடச்
சினைகொளுநல் லன்பர்கடஞ் சிந்தையிற் றிகழ்ந்திடுந்
தனைநிகர்த்த கருணையங் தடங்கடனீ செய்குவாய். (41)

நீயெனுஞ்சொற் கெப்பொரு ணிகழ்த்தலாகும் யானெனுந்
தூயசொற்கு மப்பொருள் சொல்லின்வேறிங் கின்றெனத்
தாயினு மினியனாகித் தரையினி லெழுந்தபுண்
ணியினேற் கருளினை ஞாதுருஞான ரகிதனே. (42)

ஞாதுருஞானம் ஞேயமென்னும் நவையிறந் தொளிர்தரும்
சாதுசங்கந் தன்னிலுயேன் சார்ந்திடவு மருள்வையோ
வாதுசெய்யும் வம்பர்நெஞ்சில் வயங்கிடாத சோதியே
போதில்வாழு மயனுமாலும் போற்றுகின்ற வாதியே. (43)

ஆதியாவை யாதினுக்கு மாதிநிற்கிங் கில்லையே
காதிமாயை தன்னைநாச மாக்குங்கால காலனே
பாதிமேனி பாவைவாழ மாறளித்த பண்பனே
யேதிலான லேன்விடா தெனைப்புரக்க வேண்டுமே. (44)

வேண்டுநாளும் வில்வமாதி யேந்திநின் வியன்கழல்
பூண்டுநின்ற வன்பினோடு பூசனை புரிந்திட
யாண்டும்யாண்டு மெய்ப்பொரு ளிலங்கினும்நீ யாகவே
காண்டும்யாமன் னென்னுமன்பர் கதுவிவாழுஞ் செல்வமே. ()

செல்வம்வம்மி னங்குடி செழித்திடச் செகமிசை
யல்லவிருங் கண்டமாதி நீக்கியே யவனியில்
பல்குசீர் வளநிறைநன் னெல்லையே பரிவுடன்
புல்லியாள் சிவகுருவைப் போற்றிவாழ்வம் புந்தியீர். (46)

புந்தியே மனமெனப் புகல்வரே யிருவிதம்
முந்தியே வகத்தினை முதலது விளக்குமே
சந்திசெய் பொருள்களை மனஞ்சலித் துவக்குமே
சிந்தியுமெ லாஞ்சிவத்தின் றேசிலாருந் திண்ணமே. (47)

ஏதுமெய்து மெம்மிறைதன் னிச்சையாலிஃ தன்றியே
யோதுநம் முயற்சியாலிங் கொன்றுமில்லை யுலகிரே
தீதுசெல்லு நெஞ்சினைத் திருப்பலே திருமறை
பாதுகாக்கு மாறுரைத்த பாவகப்பல் கன்மமே. (48)

கன்மமென்னி லஃதொரு கருத்தனைக் கருதுமே
நின்மல வறிவெதை நிகழ்த்திடு நிகழ்த்துவீர்
வன்மபல்செய் மாயைசெய்யுஞ் சாலமே மயங்கலென்
சென்மதூல மாயவன்னி சிவகுரு தருவனே. (49)

தருவனுன் மறைகளுன்னிச் சாரொணாத சரணமிவ்
வுருவனாகி யெளியனாகி யுலகினுற்ற வுத்தமன்
பருவர லொழித்திடப் பகருவே னுபாயம்யான்
உருகியாடிப் பாடிநாடி யோதுமன்னேன் புகழையே. (50)

149647

வேறு.

புகலாப் பதத்தி லெனையே யிருத்திப்
பொருவில் சுகத்தை யருளி
அகலாத வன்பர் நடுவே யிருக்க
வருள்செய்த வாதி முதலே
சகவா தரத்தை விடுமா தவர்க்கே
தாட்டா மரைத ருபவா
இகவாத புந்தி யுடன்வாழு மாறிங்
கெனையாள்க வென்றன் மணியே. (51)

மணியேயென் மன்னே பொன்னே வளஞ்சால்
மதுவே யமுத நிதியே
பணியே தருள்க வெனவன்பர் போற்றிப்
பரவ றெரிந்து மெளியேன்
துணியாது நின்சீர்த் தொடியார் சுரத்தர்
தோடோய வுள்ளி யுழல்வேன்
தணியா தருள்வா யரசே யெனக்குன்
சரணக் கமல மலரே. (52)

மலர்மீது வாழு மாவாணி மாதர்
வரையாது நாளும் வதியும்
குலமீது மெய்யன் புடையார்கள் சூழக்
குறைவின்றி வாழ வருள்வாய்
கலர்வாழ் குழுக்கண் ணுறுவார் முகத்தைக்
காணாத வாழ்வு மருள்வாய்
அலர்ஞால மாடா தடியேனை வாழ்த்து
மதுவேண்டும் வேண்டு மயனே. (53)

அயனாலு மல்ல வரியாலு மல்ல
வரனாலு மல்ல வினியோர்
பயனாலு வேத முடிவாழு மைய
பரமேச பாலை கொழுந
கயமா வுரிச்சீர் கனகாம் பரத்திற்
கவினத் தரித்த கருணை
மயநா னுனக்கு வழிபா டியற்றும்
வரமொன்று வேண்டு மினியே. (54)

இனியா யுளுத்தர் மனநாவி னுக்கென்
னிறைவா வெலாமு மருள்வாய்
தனியா தரத்தர் மனவா னிலங்கு
சசியே தயாம்பு நிதியே
உ[illegible]யார்வ முற்றோ தருமாண் சுகத்தில்
உதயாத்த மின்றி யொளிரும்
துனியாது மில்லாச் சொரூப நிலைக்கட்
டுனுமாறு தூய வருளே. (55)

அருளாழி நின்மாண் பதவம்பு யங்க
ளர்ச்சிக்க வென்கை தினமுந்
தெருளார் மனஞ்சிந் துரநேர் பதங்கள்
சிந்திக்க சீர்த்தி நினவே
மருளாது வாய்மன் புகலப் பணித்தே
வாழ்விக்க வேண்டு மென்னமன்
உருளாழி போலப் பிறந்தெய்த்தல் போது
முணர்வார்க டங்க ளுறவே. (56)

உறநாளு மன்பர் நிறைகல்வி யாள
ருவைமாண் குணங்க ளுடையார்
அறவோர் குழுக்கண் ணகிலேச செய்தே
யானந்த வம்பு நிதியே
துறவோர் துதிக்குஞ் சுகஞான வள்ளற்
றுரையே பவக்கொர் கரையே
இறவாத செல்வ மருள்வாய் நெலைக்கண்
ணெழுவோயெ னின்ப வுருவே. (57)

உருவான தேக முடனர்த்த மாவி
யுனதாக வீந்த வுடனே
குருவான வுன்றன் கருணாக டாக்ஷங்
குறைவின்றி யெய்தி யதுவே
இருதார்த்தர் நெஞ்சிற் சுகசோதி யாகிக்
கிளர்கின்ற ஞான குரவ
திருமாலு மாலு மாசுந்த ரேசச்
சிறியேனை யாண்ட சிவமே. (53)

சிவகாமி நேச அடியார் தமக்குச்
சிவயோக நாளு மருளும்
தவராஜர் போற்றுஞ் சசிசூட நின்னைத்
தமியே னடைந்து சுகமா
பவசாக ரத்லைத யருளாற் சயித்த
பரிபாகர் கூட்ட மடைய
அவதூதர் போற்றுஞ் சிவஞான போத
மடியேன் றனக்கு மருளே. (59)

அடியா ரகத்தைத நிலையாகி நின்றே
யானந்த மீயு மிறைவ
மடியால் வருந்து மெளியேனை யாண்ட
மாவள்ள லான மறையோய்
கடியார் குழிக்கண் விழுமாறு பார்க்குங்
கடைநாரி மார்கண் வலையிற்
படியாது பத்த ரடியே கிடக்கப்
பணுவாய் பரேச குருவே. (60)

## வேறு.

வேதப்பொருள் வேறில னென்னினென்
வோதப்பொரு ளாகிமெய் யொண்கரமேற்
சீதப்புன லோடுகொ டேசிகநின்
பாதப்புன லன்று பகீரதியே. (61)

கீரக்கடன் மீது கிடப்பவன்முன்
பாரக்கட னின்று பரித்ததும
பாரக்கரு ணாகரப் பற்றதிலா
தீரர்க்கரு டேவநி னாருளே. (62)

ஆர்சூடி யவிர்ந்திடு செஞ்சடையாய்
வார்சூடிய மங்கையர் கொங்கையிலே
நார்சூடிய நெஞ்சினர் நாடுவரோ
பேர்சூடிய பிஞ்ஞக நின்பதமே. (63)

பதமேயிர வும்பக லும்பணியச்
சிதமேநனி சிந்தையி னூர்ந்திடயான்
நிதமேநின தன்பரி னேசமுற
இதமேபெற வின்புரு வேயருள்வாய். (64)

அருளாலல லைதயநின் னையுருவம்
பொருளால்வினை புத்திர ராலுளதோ
இருளாலிரு டன்னை யிரிப்பவரே
வெருளாது வினைகொடு வீடுறுவார். (65)

வீடாவது மெய்ப்பொரு ணின்னையல்லான்
நாடாதது வேயென நானறிவேன்
ஈடார்தரு நின்னுரு வென்னுருவே
ஓடாமன தோடு முணர்ந்திடினே. (66)

ஏராரென நின்புரு வெங்குமுள
தோராதது வான வுபாதியினாற்
பேராயிர மாயிர மையபெறீஇத்
தீராதலை சீவர்க ளாகியதே. (67)

ஆகத்தினி லெங்கு நிறைந்தவவன்
மோகத்தொடொ ரிந்திய மூழ்கிடின்வி
வேகித்தறி யாதது வாதலெனத்
தேகத்தினு மென்றனை நற்சிவனே. (68)

நற்றாண்மல ரேநின நாடிடநிற்
கற்றாரவை காதலொ டெய்திடவும்
புற்றாடர வாம்பணி பூண்டசிவ
சற்றாருள் செய்நின தாள்சரணே. (69)

சரமச்சன னம்மிது வாக்தயா
பரமச்சர மாதிய பாழ்பணியே
உரமச்சனி லெங்கு நிறைந்தொளிர்ச்ச
சரமச்சர ணேக்க கணத்தருளே. (70)

வேறு.

தருவி னடியே தகுமிடமாய்த்
தரையே நல்ல சையையதாய்
ஒருவீட் டுணவை யுண்ணும
லூர்க டொறுங்கை யேற்றுண்டு
பெருவா னமது வந்துறினும்
பேணி டாதுன் பதமதுவாம்
திருவா ணத்தி னெஞ்சநிற்ற
நிமலா வருள்க நெலைவாழ்வே. (71)

வேத முடிவில் விளங்குகின்ற
விமலா வமலா விளங்கிழைபார்
பாத முடியிற் பரித்துழன்ற
பாவந் தீரப் பரமனின
சீத வடிகள் சிறியேன்றன்
சிரமேல் வைத்த செல்வமே
யேத மடிந்த தினியெனக்குக்
குறையெட் டுணையு மிலையன்னே. (72)

அன்னே யுலக மனைத்தினுக்கு
மப்பா செப்பா வரும்பொருளே
முன்னே யுலக முளைப்பதற்கு
மொய்ம்பார் சத்தா முழுமுதலே
கன்னேர் நெஞ்சங் கனிந்தகனி
யாக்கி யாண்ட காவலனே
தன்னே ரில்லாத் தயைக்கடலே
சார்ந்தே னினது பொன்னடியே. (73)

அடியார் குழுவி லனவரத
மவர்க ளாசி மிகக்கூறத்
துடியா மனத்தோ டினிதிருந்து
சுகமாக் கடல்யா னுடைவருள்
படியே பறித்துப் பன்றியதாய்ப்
பதும நாபன் பார்க்கரியாய்
குடியே வடியா ரதுதழைக்கக்
கோல மெடுத்த குணக்குன்றே. (74)

குன்றை வில்லா யுடையானே
குலமாக் குளிர்தோ ளுடையானே
பொன்று தைசெஞ் சடையானே
புலவர்க் கருளச் சடையானே
தூன்று பிறப்பிற் படையானே
சூல மாநற் படையானே
மூன்று கொண்கன் விடையானே
வாழி மௌன விடையானே. (75)

யானே பிறந்து பயன்பெற்றே
னூரா வமுதாஞ் சங்கரனைத்
தேனேர் நிறைந்த மலரிதழிச்
செழுந்தார் சூடுஞ் செம்மறனை
வானே முதலாம் பூதங்கள்
வகுத்துக் காத்து மலரடிக்கீழ்
தானே யடக்குந் தன்மையனைத்
தலைவள் ளலையான் றுனடைந்தே. (76)

அடைந்தார்க் கரிதாய்ப் பிறவிதனை
யாக்கு மமல வண்ணலைமன்
மிடைந்தே வேதன் விண்டுமுதல்
விண்ணோர் வணங்கும் விண்ணவனை
மடந்தை வாழும் வாமபா
கத்தான் றன்னை மறையவனை
யுடைந்த கரைபே ருததியென
வோடக் கண்ணீ ருரைப்பேனே. (77)

பேனந் தரங்க மாதியபல்
பேதந் தானும் பெருங்கடனீர்
தானம் முருவி லதுபோலச்
சகங்க ளெல்லாந் தழைத்திடுமால்
ஞானந் தன்னு ணோக்கிடினம்
வடிவே யெல்லா மெனநவின்ற
வானந் தத்தத் தான்போற்றும்
முரையேய் பாத மகிழ்வருளே. (78)

வருவ வெல்லாம் வருகவரா
 தொழிவ வெல்லா மொழிகவெனப்
பெருமா வரைபோற் றிடமாகப்
 பிறங்க வருள்வாய் பெம்மானே
யுருவ முருவ மருவுருவ
 மனைத்து மானோ யானந்தத்
திருவே யன்பர் மிகப்போற்றுந்
 தெய்வ மருந்தே சிவகுருவே. (79)

சிவமே யெல்லா மதிற்பிரிதாய்ச்
 சிறிது மில்லை யெனமறைகள்
நவமே நவமே யெடுத்துரைத்து
 நானு பேதத் தானைந்து
அவமே பிதற்று மனுரையிந்த
 வவனி தன்னி லளித்தாயேன்
தவமே தவத்தி னற்பலமே
 தாயே தன்னந் தனிமுதலே. (80)

## வேறு.

முதலு மாகி முடிவு மிடையுமெவ்
விதமு மாகி விளங்கிய வேதிய
பதமு மாகிப் பதப்பொரு டானுமாஞ்
சித மளித்ததற் கென்செயும் மாறதே. (81)

மாறி டாதநன் மாக்கரு ணைக்கடல்
தேறி டாதமைச் சித்தமுஞ் சிந்துபோ
லூறி டாத வொளியுடைக் கண்களும்
சோறி டாதவத் துட்டருக் குண்டரோ. (82)

உண்ட நின்னடி யார்மிச்சி லுண்பதே
கண்ட தென்னக் கருதுங் கலைவலார்
மண்ட னில்வரு மூதியம் வாய்ப்பரவ்
வண்டர் போற்ற வவனியில் வாழ்வரே. (83)

அவ னிவனெனு மல்ல லகங்காரத்
திவ னியல்லது வன்றி யெனிலொரு
சிவம தன்றிச் சிறிது மிலைவரு
பவம கற்றுமு பாயமிஃ தாகுமே. (84)

ஆகு நீர்நம் மரன்றிரு வாலயம்
ஏகு மன்னவ னேர்மன்னித் தோத்திரம்
பாகும் கைப்பப் பகர்ந்திடும் பாழ்வினை
போகும் போகுமப் பொன்னடி சூடுமே. (85)

சூட வன்னவன் பொன்னடி தொண்டரான்
கூட வேதங்கள் கூறமொண் ணுதசீர்
பாட வாழ்வு படைத்திடு வோமெனி
னீடச் செல்வ ரிகுத்தி லெமரங்காள். (86)

காளை வாகனன் கன்னல்வி லேந்திய
வேளை வெண்பொடி யாக்கிய வீரன்பொற்
றாளை யெண்ணித் தரையினில் வாழ்குந
ராளை யாண்டவ னுயடை வாமரோ. (87)

அடைய வுஞ்சிவ மாக வறிந்தவர்
இடையில் வேறொன்றை யெண்ணுவ தில்லையே
தடையி லானந்த மேதன் சொரூபமா
யுடைய ராவ ருடைமையு மில்லையே. (88)

இல்லை யென்பதிங் கில்லையெஞ் ஞான்றுமே
தொல்லை யுள்ள சொரூபமே யுள்ளது
கல்லை யொத்த கருத்தைக் குழைத்திடி
னெல்லை யப்பொரு ளுற்றிடு முண்மையே. (89)

உண்மை யானவு னெண்பத முற்றிடக்
கண்மை யாரின் கனவு மறந்திடப்
புண்மை போகப் புரிந்திடு நல்லருள்
தண்மை மேவு தயாச்சா கரத்தனே. (90)

வேறு.

சாக ரத்தொடு சொப்ப னந்துயிற்
சாக்கி யாயொளி ருங்கரு
ணாக ரகுரு நாத நல்வினை
தீவி னைத்தொடர் நாசஞ்செய்
தேக ரத்தினி னெல்லி போற்சிவ
மாக வேநன் குணர்த்தியே
மாக ரத்திரு மாமரு ழும்பத
வாழ்வி யென்னையு மண்ணிலே. (91)

மண்ணில் வந்தவ ரெய்து மாபெருஞ்
செல்வ மாவது மாயிரங்
கண்ணி னானது வன்று வேதண
தன்று மாலின தன்றுகாண்
எண்ணி னுலுற வின்றி யெங்கு
மிலங்கு மெய்ம்மிறை யீசனார்
பண்ணி னன்மொழி பங்க னன்பர்
பதம்ப ணிந்தவர்ப் பரவலே. (92)

பாவை சூழுல குற்று மானிட
ராகிப் பண்டித ராகியே
உரமெய் தற்குரி யோரு மையல்கொண்
டுலகி லோடியு ழலினென்
பரம தேசிக னுஞ்சி வகுரு
பரன்ப தம்பணிந் தேமனம்
விரவு மன்பினின் மெய்யு ணர்ந்திடின்
விளம்ப வென்னவர் மேன்மையே. (93)

மேன்மை மெய்யுணர் வுற்ற ரன்பத
மேவ லேபிது மெய்ம்மையே
வான்மை கான்முயற் கோடு வந்தியின்
மதலை யேநிகர் மாயையால்
ஏன்மை யுற்றுழல் கின்ற னிர்மிக
வேழை மாந்தர்நீ ரெம்மிறை
போன்மை யற்றிட யார்பு கன்றனர்
புகுமி னன்னவன் பொன்னடி. (94)

பொன்ன கர்க்கிறை தான வரிறை
போத னார்முன்பு புக்கியே
நன்னர் செப்புக நானெ னும்பொரு
ளொன்று கேட்டிட நாதனும்
மன்னர் நுங்கணின் மான வனுள
னென்ற லும்மவர் சாயையை
யுன்னி யேகின ரென்னி னாரதை
யுணர்வ ரையவிவ் வுலகிலே. (95)

உலகில் வாழுளவும் முல குய
வோத நீர்ச்சடை யுத்தமன்
இலகு சங்கர நாம மேதரித்
திம்ம ணின்க ணிறங்கிய
அலகின் மேன்மைய னமுத வாக்கைநல்
லன்ப ருக்கெளி யேன்சொலப்
புளக மாதிய பூப்ப மெய்யினிற்
புண்ணி யாவருள் புரிகவே. (96)

புரிக சோத்திர மாதி பல்கர
ணக்கு ழுக்களுநம் பூசையே
விரிக வாய்கவென் னிம்ம னத்தெணம்
விச்சை யேஃடி வாமெனக்
கெரிக திர்முன ரிவ்வு லகென
யாவு மெண்முன் னிலங்குமால்
அரிய யன்றெழு மைய னேநின்
தருளி னாலிவ ணுயதே. (97)

தேவ மாயையி னூற்செ கத்திரள்
செய்த தென்பது சிந்தியார்
ஆவ மாந்தர்தம் மறிவை யென்னெண
வறைகு வேன்குரு நாதனே
சாவ தாதிய தன்ன முந்தொட
ராத சத்திய தத்துவம்
ஆவ தேதது பெர்கி வாழ்ந்திட
வைய னேயருள் பண்ணிடே. (98)

பண்ணி றைந்திடு பாவி னஞ்சொலிப்
பாத பங்கயந் தன்னிலே
கண்ணி றைந்திடு கான்ம லர்சொரிந்
தைய கங்கையின் காதல
வுண்ணி றைந்திடு மன்பி னோடுனை
யுன்ன வேயருள் செய்குவாய்
தண்ணி றைந்திடு சத்து வாவொளிர்
வித்த காசிவ சம்புவே. (99)

சம்பு போற்றி சதாசி வாவர
சங்க ராபவ போற்றியே
நம்ப போற்றியென் னாத போற்றிமெய்ஞ்
ஞான போற்றி நதீமதி
வம்பு சேரித ழித்தொ டையணி
வான வாநனி போற்றிநின்
அம்பொ னண்மலர்ப் பாதம் வாழ்த்திட
வருள்க சிற்பர போற்றியே. (100)

திருச்சிற்றம்பலம்.

---

# நன்றியுரை.

---

இந்நூலபிமானிகளுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

இந்நூலினிது முடியுமாறு சிரத்தை எடுத்துப் பிழை முதலிய திருத்தி நன்மை புரிந்தவர்களாகிய வேம்பத்தூர் சிரஞ்சீவி பி. ம. ஏரம்பனுக்கும், மதுரை ஸ்ரீமான் சு. சிதம்பர ஓதுவாமூர்த்தி அவர்களுக்கும் யாங்கள் மிகுந்த நன்றி செலுத்துகின்றோம்.

இங்ஙனம்,

மதுரை.
1—10—30.

சு. ஞானம்பாள்.
சி. பெரிய நாயகி.
விபூதிமடம்,
நிர். 13 தெற்குச் சித்திரை வீதி,
மதுரை.

149647
சென்னை 600 008.

